ஜெகன்நாதன்

Point No.40

**அன்னை ஒருவருக்கு வழங்க முடிவு செய்துள்ள விஷயம் அவரைத் தேடி உடனே வரும். ஆகவே நாம் அவரைக் கேட்கின்ற விஷயம் அவர் அனுமதிக்கக் கூடியதாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும்.**

அன்னையை அறிந்தவர், கூர்ந்து சுற்றுமுற்றும் கண்டால், அற்புதம், ஆச்சரியம், அபரிமிதம், ஆனந்தமிருப்பதைக் காணலாம். **இந்த சமூக சூழல் என்றும் உண்டு**. நாமறிவதில்லை. அன்னை ஒரு பிரார்த்தனையை அனுமதிக்கும் வகையைக் கண்டால், **அதையும் சூட்சுமமாகத் 'தொடர்ந்து' உள்ளுறை ரகசியங்களைக் கண்டால்,** ஏராளமாகக் கண்ணில்படும். அன்னை கேட்டதைத் தருவார், நினைத்ததுமே பலிக்கும் என்பதெல்லாம் உண்மை. அதைக் கடந்தது **அன்னை மூலம் வாழ்வில் உள்ள புதை பொருட்களை அறிவது**. வாழ்வில் அதிர்ஷ்டம், பேரதிர்ஷ்டம் புதைந்திருந்தால் அன்னை ஜீவியத்தில் என்ன மறைந்துள்ளன? அவை யோக பொக்கிஷங்கள். 'நான் எளியவன்' என்பவனுக்கு எப்படி அவை பயன்படும்? யோக பொக்கிஷமாகப் பெறாவிட்டாலும் அவை வாழ்வை உச்சகட்டத்தில் வளப்படுத்தும். அன்பன் கேட்பது வேலை வேண்டும், திருமணமாக வேண்டும், வருமானம் வேண்டும், புத்திர சந்தானம் வேண்டும், பிரமோஷன் வேண்டும் போன்றவை. **அன்பரே தன் செயலாலோ, மனப்போக்காலோ தடையை எழுப்பா விட்டால் இவை தானே பலிக்கும்**. சிக்கலான பிரச்சினைகளையே மனிதன் முக்கியமாகக் கருதுவான். 10 ஆண்டாக தன் பொறுப்பில் உள்ள பெரும் சொத்து - மார்க்கட்டில் 20லட்சம் பெறும் சொத்து - உடையவர் 5 இலட்சத்திற்கு விலை காட்டுகிறார். நிலத்தை வாங்கிவிட்டால் 5 லட்சம் எளியது. 'பணமிருந்தால் வாங்கலாம்' என்பது சிக்கல். இது சமயம் அந்த அன்பர் வியாபாரத்திற்கு பாங்க் 8 இலட்சம் கொடுக்க முன்வந்தது. அன்பர் கம்பனிக்கு 8 இலட்சம் வேண்டாம், நிலத்திற்கு 5 லட்சம் தர முடியுமா? **என்று பாங்க் அதிகாரியிடம் சிக்கலைக் கூறினார்.** அதிகாரி பாங்க் இஷ்டப்பட்டால் பணத்தை விற்பவரிடம் நேரடியாக ஆபீசில் கொடுத்துவிட்டு, சப் ரிஜிஸ்ட்ராரிடமிருந்து பத்திரத்தை பாங்க் வாங்கிக் கொள்ளும் என்றார். அன்பர் சிக்கல் தீர்ந்த எளிமையை நினைத்து வியந்தார். அதிகாரி நிலத்திற்கு 5ம், கம்பனிக்கு 8ம் தருகிறேன் என்றார். **ஒவ்வொரு முறையும் அன்னை தவறாது செயல்படும் வகையிது.** சிக்கல் அவருக்கு சிக்கல் இல்லை. கேட்பதற்கு மேலும் கொடுப்பதே அவர் அபரிமிதமான அருள்.

பிரச்சனை தீர்வது சிறப்பு. இங்கு அன்பர் அறிய வேண்டியது 'வாழ்வில் சிக்கலிருப்பது உண்மை. சிக்கல் அன்னைக்கில்லை' என்பதை அன்பர் அறிவது முக்கியம். எலிசபெத் லிடியா விஷயமாக இடிந்து போனாள். ஜேனுக்கு லிடியாவால் குடும்பம் சீரழியும் என்றும் தெரியவில்லை. லிடியாவுக்கு ஒரு விடியல் ஏற்படும் நேரம் பெண்கள் குதூகலமாயினர். பணம் அவர்கள் மனதில் தட்டுப்படவில்லை. லிடியாவைக் கண்டுவிட்டேன் என்ற கடிதம் வந்தது. என்ன செய்தி, நல்லதா, கெட்டதா என்று எலிசபெத் கேட்டதற்கு 'என்ன நல்ல சேதியை எதிர்பார்க்க முடியும்' என்கிறார் தகப்பனார். பெண்ணைக் கண்டு பிடித்தது அவருக்கு நல்ல செய்தியில்லை. பணம் வேண்டும்! எப்படித் தருவது என்பது அவர் கவலை. அது கொடுக்க முடியாத பணம். நடந்தது என்ன? பெண் திருமணம் செய்து கொண்டாள். அதைத் தொடர்ந்து ஏமாந்து போன ஜேனுக்கும் திருமணம் பெருமளவில் நடந்தது. **அதையும் கடந்து தகப்பனார் கடன்படவில்லை. அந்தப் பணத்தை திருப்பித்தர வேண்டாம் என்ற நிலை எழுந்து எலிசபெத் பெம்பர்லியை எட்டினாள்**. அன்னை பிரார்த்தனைகளை அனுமதிக்கும் பொழுது நாம் காணும் வாழ்வில் புதைந்துள்ள அற்புதங்கள் பல.

- பெரும் பாரத்தைத் தாங்க ஏற்கனவே டார்சி சூழலில் காத்திருக்கிறார்
- ஜேனுக்கு பிங்லி தடையானால், அவரும் ஏற்கனவே அறிமுகமானவரே
- பெம்பர்லியை நினைக்க முடியாது என்றாலும் அதுவும் ஏற்கனவே வந்த செய்தியே.

**வாழ்க்கை ஏற்கனவே பெற்ற**
**அற்புதங்கள் இவை. இவை நாம்**
**அறியாதவை, அறிந்தால் நம்ப முடியாதவை**

- அன்னை நம் சூழலை எப்படி சொர்க்கமாக்குகிறார், என்ன தன் சூழலில் வைத்திருக்கிறார் என்பதை நாம் நம் பிரார்த்தனை மூலம் அறியலாம்.

**Point No.41**

**ஒருவருடைய தகுதிக்கு மீறி கொடுக்கும் பொழுது அவர் நம் கட்டுப்பாட்டுக்குள் இருக்க மாட்டார். அதே சமயத்தில் ஒருவருடைய தகுதிக்குக் குறைவாகக் கொடுத்தாலும் அப்பொழுதும் அவர் நம் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்க மாட்டார். ஆகவே அடுத்தவர் ஒத்துழைப்பு நமக்கு வேண்டுமானால் அவருடைய தகுதிக்கு ஏற்றது போல் தர வேண்டும். கூடவோ குறையவோ கொடுக்கக் கூடாது.**

மனிதன் தானே முன்னுக்கு வந்தது ஒரு கட்டம். குடும்பத்தின் மூலமும் சமூகத்தின் மூலமும் உயரும் கட்டம் நாம் வாழும் 21ம் நூற்றாண்டு. தலைப்பு ஒருவரால் அடுத்தவர் உயரும் நிலைக்குரியது. சுதந்திரம் வரும் வரை சமூகம் மனிதனை உயர்த்த முயற்சிகள் எடுக்கவில்லை. ஏனெனில் அது அந்நிய ஆட்சி. அந்நியன் நாட்டை ஆள போட்ட ரோடு, ஏற்படுத்திய ரயில்வே, நடத்திய பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், அவன் வியாபாரத்திற்குரிய பாங்குகள் மட்டுமே அதுவரை இருந்தன. இன்றைய சர்க்கார் சொந்த சர்க்கார். கல்வி அனைவரும் பெறவும், போக்குவரத்து எல்லா கிராமங்களுக்கும் ஏற்படவும், பஞ்சம் தலையெடுக்காமல் உணவு உற்பத்தியாகவும், சிகிச்சை அனைவரும் பெறவும் முழு முயற்சி செய்கிறது.

**சமூகம் அனைவரும் இடைவிடாது ஆனந்தம் பெறவும்**
**அதன்மூலம் அறிவு பெறவும் ஆயிரக்கணக்காக சினிமா**
**படங்களைத் தயாரிக்கின்றனர்.**

சினிமா, T.V ரேடியோ 'முதியோர் கல்வியை' வளர்க்கும் அரங்கங்கள். தலைப்பு நாடு முன்னேற தனி மனிதன் அதிகபட்சம் முன்னேற வேண்டுமென்ற முக்கிய கருத்து. MSSஇன் முக்கியமான கொள்கைகளில் ஒன்று; அந்நிய நாட்டு உதவியால் நாடு சீரழியும் என்பது. **இதுவரை அவ்வுதவியால் முன்னுக்கு வந்த நாடுகளில்லை.** போர்ச் சேதத்தை விட்டு மீள ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க உதவி பெற்று சுதந்திரத்தை இழந்தன. உதவியை மறுத்த ரஷ்யா வல்லரசாயிற்று. செல்லம் தவறு. பிரியம் உயர்ந்தது. வீட்டில் பிரியம் குழந்தைகளைத் திறமையும் பண்பும் உடையவர்களாக்கும். செல்லம் சீரழியச்செய்யும். சர்க்கார் கொடுக்கும் மான்யம் அளவுக்கு மீறினால் மக்கள் பெற்றதைக் கைவிட மறுத்து மேலும் முன்னேற்றம் வரத் தடையாவர். மின்சாரம் அதுபோல் வளரத் தடை ஏற்பட்டு விட்டது. பணம் கொடுத்து ஒட்டு வாங்கினால், **நாளாவட்டத்தில் பணம் கொடுக்கலாம், ஒட்டு வராது என்றாகிறது.** அதன்பின் பணம் அவசியமாகக் கொடுக்க வேண்டும். ஆனால் அதனால் ஓட்டுவராது என்ற நிலை உருவாகிறது. பாத்திரம் நிறைந்தபின் ஊற்றும் நீர் வழிந்தோடும். சாதம் வேகப் பதம் உண்டு. கூடவோ குறையவோ கூடாது. சாப்பாட்டிற்கும், சங்கீதத்திற்கும், எதற்கும் அளவுண்டு.

**அளவிற்கு மிஞ்சக் கூடாது. குறைந்தால் பலனிருக்காது.**
அளவை அறிவது சமூகம் பெற்ற அமிர்தமான ஞானம்.

குழந்தை வளர்ப்பு, திருமண சுமுகம், டாக்டர், வக்கீல், மார்க்கட் ஆகிய இடங்களில் இக்கருத்து பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. (Price) விலையென்பது எவரும் ஏற்படுத்துவதில்லை. **பொருள் தன் விலையைத் தவறாது நிர்ணயிக்கும். அதுவே மார்க்கட்டின் சிறந்த திறமை**. தலைவர் தன் பிரபலத்தை கூட்டம் போட்டு நிலை நிறுத்த முடியாது. அது தானே ஏற்படுவது. தானே நீடிக்கும். தானே மறையும். மனிதனுடைய கட்டுப்பாட்டிலிருக்காது. கட்டுப்பாட்டிலில்லாததைக் கட்டுப்படுத்த முயன்றால் தோல்வி கிட்டும். **வெற்றி பெற்றால் முன்னேற்றம் மாறி பின்னேற்றமாகும். கொடுமை உயிர் பெறும்**. மாமியார் மருமகள் கொடுமை, ஜாதிக்கொடுமை, பணம் செய்யும் அட்டகாசம், பதவி கொடுங்கோலாவது எல்லாம் இயற்கை நியதியான 'அளவை' மனிதன் முடியும்பொழுது மீறி அகந்தையின் ஆட்சியை ஏற்படுத்த முயன்று வெற்றி பெறுவதால் எழுவது. சார்லஸ் என்ற ஆங்கில மன்னர் தலையை இழந்தது, பிரெஞ்சு, ரஷ்ய, அமெரிக்க புரட்சி அதை அழிக்க ஏற்பட்டவை. இந்திய சுதந்திரம் உலகத்திற்கு முக்கிய கட்டம். **சுதந்திரத்தை விட ஜாதிக் கொடுமையை அழிப்பது முக்கியம் என 60 ஆண்டாக நாம் அறிகிறோம்**. மகாத்மா ஹரிஜன முன்னேற்றத்திற்கு செய்தது பெரிய சேவை.

மனிதன் இன்று பணத்திற்கும் பதவிக்கும் முழு அடிமையாகி அறிவை உலகத்தலைமை இழந்து விட்டது. **விஞ்ஞானி உலகை ஆளும் நேரம் அவனுக்குப் பகுத்தறிவில் நம்பிக்கையில்லை. எதேச்சாதிகாரத்தை விஞ்ஞானி நாடி வெற்றி பெற்றுவிட்டான்**. கடந்த நூற்றாண்டுகளில் மதமும், மதத்தின் தலைவர்களும் உலகை ஆண்டனர். அதன்முன் படைத்தலைவர்கள் ஆண்டனர்.

மனிதன் சுதந்திரம் பெற்று தன்னைத்
தானே ஆளும் நூற்றாண்டு 1950-2050.

அக்காலத்தில் குடும்பத்திலும், வாழ்விலும், அரசியலிலும், யோகத்திலும் முக்கியமாகக் கருத வேண்டிய பல கருத்துகளில் ஒன்று: **கொடுப்பதின் அளவு. அதுவே தலைப்பு**.

**Point No.42**

**நாம் அடுத்தவருக்குப் பணம் தர வேண்டும் என்ற நிலையிருந்தால் பணத்தின் கைதான் ஓங்கியிருக்கும். மற்றவர் நமக்குப் பணம் கொடுக்க வேண்டியிருந்தால் நம் கை ஓங்கியிருக்கும். ஆகவே பணத்தை நம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்புகிறவர் எவரிடமும் கடன்பட்டிருக்கக் கூடாது.**

மனிதன் முன்னுக்கு வர வேண்டும் என்பது அனைவரது இலட்சியம். உடல் நலம், குடும்ப நலம், ஊரில் மரியாதை, சொத்து, கல்வி, அந்தஸ்து, பதவி ஆகியவை உயரும்பொழுது ஒருவர் முன்னுக்கு வருவார். **மனிதன் சமூகத்தின் ஒரு அம்சம்**. மனிதன் பெறுபவை அனைத்தும் சமூகம் அவனுக்குக் கொடுத்தது. பணம் அவற்றுள் முக்கியமானது. பணம் சமூகத்தின் சக்தியான அதிகாரத்திற்குடையது. அதனால் பணம் முக்கியம். பணம் பெற்றவர் பணத்திற்கு அடிமையானாலும் பணம் பெருகும். பணம் அவருக்கு அடிமையானாலும் பெருகும். முதல் வகை பணம் இருளுக்குரியது. இரண்டாம் வகைப் பணம் அருளுக்குரியது. உழைப்பாலும், அறிவாலும், செல்வாக்காலும், திறமையாலும் சம்பாதிக்கும் பணம் இருளுக்குரியதில்லை என்றாலும், அருளுக்குரியதல்ல. உடலும், உயிரும், மனமும் இருளானவை என்ற பொருளில் அவை இருளுக்குரியவை. லாட்டரி சீட்டு, பங்கு மார்க்கட்டில் சம்பாதிப்பவை இருளைப் போற்றுபவர் பெறும் பணம்.

ஏமாற்றுவது, அநியாயம், அக்கிரமம் செய்து சம்பாதிப்பது நேரடியான இருளுக்குரியவை. **அவை இருளுக்குரியவை என்றாலும், இருளால் வளர்பவர்கட்குதவும்**. அழுகிய பழம் வியாதி தரும். மாட்டிற்கு உடல் நலம் தரும். அருளால் பணம் சம்பாதிப்பது எளிதல்ல. வெற்றி பெற்றால் அபரிமிதமாகப் பெறலாம். பணம் மார்க்கட்டில் உற்பத்தியாவது. மார்க்கட் ஒருவர் அடுத்தவரை நம்புவதால் பணத்தை உற்பத்தி செய்கிறது. **மனித நம்பிக்கையின் சமூக சக்தி பணம்**. பணம் தாராளமாகப் புழங்க உழைப்பாளியாக, திறமைசாலியாக, நாணயமானவராக இருப்பது அவசியம். அப்படியிருக்கலாம். இல்லாமலிருக்கலாம். **எப்படி இருந்தாலும் பணத்திற்கே உரிய சுபாவம் உண்டு**. கடன்பட்டவர் நல்லவரானாலும் கடனுக்குரிய சுபாவம் உண்டு. கடன்பட்டால் நெஞ்சம் கலங்கும். மரியாதை மரியாதையானவர்க்குண்டு என்றாலும் மரியாதையைக் காப்பாற்றா விட்டால் அது போகும். மரியாதையுள்ளவரும் மதியாதார் வாசல் மிதித்தால் மரியாதை போகும். விருந்து உயர்ந்ததானாலும், இலையில் பரிமாறப்பட வேண்டும். மேஜை மீது விருந்தைப் பரிமாற முடியாது. உயர்ந்தவை உயர்ந்த குணத்தைக் காப்பாற்ற உரிய முறைகள் பல. பணத்தை அது போல் கருதினால், எவ்வளவு உயர்ந்த வேலையானாலும், சேவையானாலும் **கடன்பட்டுவிட்டால் பணம் அதன் சுபாவப்படி செயல்படும்**. **மரியாதை போகும்.** விஷயம்தான் முக்கியமானாலும் தோற்றமும் முக்கியம். அதற்குரிய நேரம் வந்துவிட்டால் எந்த சிறிய விஷயத்திற்கும் முக்கியத்துவம் வந்துவிடும். துரும்பும் துள்ளும் நேரம் உண்டு. பொருளைக் கருதிச் செயல்படலாம். **நேரத்தைக் கருதும் நேரமும் உண்டு.**

பணம் மட்டுமன்றி எந்த பொருளையும் நாம் ஒருவரிடமிருந்து பெற்றால், கொடுத்தவர்க்கு நம்மீது அதிகாரம் ஏற்படும். திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் எனப்படுவது பெண்ணை ஒரு குடும்பத்தில் கொடுத்துவிட்டால், அவள் அவர்களால் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதால், இடம், பொருள், ஏவல் அறிந்து பெண் எடுக்க வேண்டும். முக்கியமாகப் பெண் கொடுக்கும் பொழுது ஆய்ந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். நம் வீட்டுப் பெண் பிறர் வீட்டில் அவர்களிடையே சந்தோஷமாக இருக்க வேண்டும் எனில் அதற்குரிய யோசனை பெரியது. பண விஷயத்தில் 'கொண்டான், கொடுத்தான் வீட்டில் பணத்தொடர்பு கூடாது' என்பது பரம்பரை விவேகம். பணமும் பெண்ணும் முரணானால், பணம் வெல்லும். பெண் மனம் சுருங்கும். **போரில் ஐரோப்பிய நாடுகள் சின்னாபின்னமாயின.** நிலைமை சீராக ஏராளமான பணம் தேவை. அமெரிக்கா கொடுக்கத் தயாராக இருக்கிறது. மார்ஷல் ரேடியோவில் 'அமெரிக்கா உதவி செய்யப் பிரியப்படுகிறது, கேட்டால் தருவோம்' என்றார். **பணம் பெறுபவர் கேட்டு வாங்க வேண்டும் என்பது பணத்திற்குரிய நடைமுறை.** பிரான்ஸ், U.K, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் அமெரிக்கப் பண உதவி பெற்றனர். தங்கள் சுதந்திரத்தை இழந்தனர். ரஷ்யா பண உதவி பெற மறுத்தது. வல்லரசாகிவிட்டது. **பணத்தின் சுபாவம் பெறுபவர் மரியாதை போகும்.** கொடுப்பவர் மரியாதை உயரும்.

மேலும் 10 கோடி திட்டத்தில் 1½ கோடி துண்டு விழுந்தால் அதைக் கொடுக்க முன்வருபவர் 3/20 பாகம் 15%ற்கு உரியவர். அவர் கொடுப்பது முதலானால் பாதி இலாபம் கேட்பார். எப்படியும் 15%க்கு ஒத்துக் கொள்ள மாட்டார். மேலும் 25% (அ ) 30% தர வேண்டி வரும். **சமூகத்தில் பணத்திற்கு நேரத்தைப் பொறுத்து அதிக மரியாதை உண்டு**. அதனால் அதை ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும். ஆபீசர் மேஜை உயரத்திலிருந்தால்தான் அதிகாரம் செல்லும். அவருக்கும் பெரிய மேஜை பெரிய உடுப்பு, பெரிய பட்டம் உரியது. பணம் போல் பதவிக்கும் அதிகாரம் உண்டு.

ஜெகன்நாதன்

**Point No.43**

**பணமும் அதிகாரமும் அடுத்தவரிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான பாதுகாப்பான அரண்கள். ஆகவே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் பணத்தையும் அதிகாரத்தையும் சேகரித்துக் கொள்ள வேண்டும்.**

சாப்பாடும் மூச்சும் உடலை உயிருடன் வைத்திருப்பவை. வீடும், உறவும் ஊரில் வாழ உதவுபவை. கல்வியும் திறமையும் வாழ்வில் முன்னேற இன்றியமையாதவை. தண்ணீரும் மின்சாரமும் அவசியம் தேவை. குடையும், செருப்பும் கோடையில் உதவும், பணம் சமூக சக்தி. எதற்கும் அவசியமானவை. பணத்தை சம்பாதிக்கவும், சம்பாதித்ததைக் காப்பாற்றவும் அதிகாரம் தேவை. முதலாளிக்கு அதிகாரமில்லை எனில் காவல்காரன் பேச்சுக்குக் கட்டுப்பட வேண்டும். வகுப்பில் ஆசிரியர் அதிகாரமற்றவரானால், மாணவர்கள் இஷ்டப்படி நடக்க வேண்டி வரும். **அதிகாரமில்லாத கணவனை மனைவி அதிகாரம் செய்வாள்.** குறைந்த பட்சம் அதிகாரமில்லாதவன் Qவில் நின்றால் அனைவரும் அவனைக் கடந்து போவார்கள். பிக்பாக்கட் அவனிடமிருந்து திருடும் அவசியமிருக்காது. மிரட்டி பர்ஸைக் கொடுக்கும்படி கேட்பான். **அனைவரும் அவனை வெறியேற்றுவார்கள்**. வீட்டிலிருந்தும் ஊரிலிருந்தும் வெகு சீக்கிரம் அவன் விரட்டப்படுவான். நாயும் அவனைக் கண்டால் குலைக்கும். கொசுக்களும் படையாக அவனைச் சூழ்ந்து கடிக்கும். உள்ள திறமை அவனுக்கு உபயோகப்படாது. பிறர் அவன் பொருளைக் கண்ணெதிரே எடுத்துக் கொண்டு போவார்கள். **போடாதவளை மகராசி எனவும் போடுபவளை ஒருநாள் தவறினால் திட்டும் உலகமிது.** குளிரிலிருந்து பாதுகாக்க உடையும், வெய்யில் சுடாமலிருக்க செருப்பும் தேவை. வாழ்க்கையை வசதியாகவும் வளமாகவும் நடத்த பெண்ணைக் கைப்பிடித்தால் 'இல்லானை இல்லாளும் வேண்டாள்'. அவள் அவனுக்குத் தவிர மற்றவர்களுக்கு சேவை செய்வாள். திராணியில்லாத பெண் திருமணம் செய்து கொண்டால் அவன் அடுத்த பெண்ணை அழைத்து வருவான். மனைவி அவளுக்கு வேலைக்காரியாவாள்.

அறிவுள்ள ஆசிரியர் தான் கற்றதை போதிக்க வகுப்பு கட்டுப்பட வேண்டும். 'நான் செய்த வேலைக்கு அடுத்தவர் கூலி பெறுவார்' என்பது பகவான் கூறுவது. அரச குமாரன் அதிகாரமில்லாதவரானால் அவர் அதிகாரத்தை அடுத்தவர் செலுத்துவார். சிப்பாய் கலகத்தின் முன்னிருந்த மொகலாய அரசர் பிரிட்டிஷார் கொடுத்த பென்ஷனில் வாழ்ந்தவர். அவர் ஆட்சியில் திரை மறைவில் வீட்டுப் பெண்கள் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கூறுவதே சட்டம். அறிவு இல்லாவிட்டால் அதிகாரம் போகும். அதிகாரமில்லாவிட்டால் அனைத்தும் போகும். **பயிரிடுவது முக்கியமில்லை. மகசூல் வீட்டுக்கு வர வேண்டும். அதைக் காப்பாற்ற வேண்டும்**.

வியாபாரம் விவசாயத்தை அடுத்து வந்தது. விவசாயம் தான்யம் தரும். வியாபாரம் பணம் தரும். வியாபாரத்தில் பணம் முக்கியம். விற்றுப் பெற்ற லாபத்தை வீடு வரை கொண்டுவர பாதுகாப்பு வேண்டும். வீட்டில் பணமிருந்தால் திருடன் அறிவான். திருடனிடமிருந்து காப்பாற்ற முடியாத பணத்தை எப்படி அனுபவிப்பது? **கோபம் அதிகாரத்தை வெளிப்படுத்தும்.** கோபமே பாதுகாப்பு. 'அதிகமாகப் பேசினால் கோபம் வரும்' என்பது வழக்கு. கோபம் வலிமையற்றவனின் வலிமை. உடல் வலிமை அடிக்கும் கடிக்கும், கோபம் திட்டும். கோபம் வராதவனுக்கு வலிமையான மனமிருந்தால் அது பெரிய பாதுகாப்பு. சிறு குழந்தைகளும் தாயாரிடம் வசதிபெற அழவேண்டும். 'அழுதபிள்ளை பால் குடிக்கும்'. பால் நினைந்தூட்டும் தாய் பண்புள்ளவள். பண்பு சிலருக்கே இருக்கும். **அன்னையை அறிந்து அன்பராகி மகிழ்ந்தவர் அன்னையின் அம்சங்களைக்**

**காண்பர்.** எதிரியை தண்டிக்கக் கூடாது என்ற பெருந்தன்மையுள்ளவனிடமிருந்து ஒருவன் தப்பித்தால் வாழ்வு தவறாமல் தண்டிக்கும். வாழ்வும் அவன் போன்றது என்றால் அவனைத் தண்டிக்காது. ஆதரவும் தரும். **வாழ்வைக் கடந்தவர் அன்னை.** அன்னை அவன் போன்றவரையும் தண்டிக்கும் அவசியத்தை உணர்ந்தவரில்லை. அவனே அன்னையிடம் போய் தண்டனையைக் கேட்டு வாங்கும் அற்புதம் **அன்னையின் பேரருளுக்கே உரியது.** அந்த நிலையில் தண்டனை ஒரு சொல்லுக்கு பெரும் தண்டனையாகும். ஓர் எண்ணம் கெட்ட எண்ணமானால் அவன் வாழ்விலேயே அது பலிக்கும்பொழுது பார்க்க முடியாது, கேட்டால் சகிக்க முடியாது. அன்னை ஆயிரம் விதமாக செயல்படுவதில் இதுவும் ஒன்று.

பணம் பாதுகாக்கும். அதிகாரம் அனைத்தையும் செய்யும்.
பணத்தை ஈட்டுபவன் அதை நிர்வாகம் செய்யக் கற்றுக்
கொள்ள வேண்டும். அதிகாரம் அதிக காரமாகக் கூடியது.
**காரமில்லாமல் காரியம் கூடி வராது.**

**Point No.44**

**சட்டம் தனக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என விரும்புகிறவர் அவருடைய பணம் சம்பந்தமான செயல்பாடுகள் எல்லாவற்றையும் Recordல் கொண்டு வர வேண்டும். பண விஷயமாகத் தகராறு எழுந்தால் இருக்கின்ற Recordகள் தனக்கு சாதமாகப் பேசும். அவ்வகையில் பணம் நமக்குக் கட்டுப்பட்டிருக்கும்.**

மனிதன் சாமர்த்தியமாக செயல்பட விரும்புகிறான். சாமர்த்தியம் பலனை மட்டும் கருதும். **நியாயத்தைக் கருதாது.** நியாயத்தை முக்கியமாகக் கருத வேண்டும். ரெக்கார்ட் என்பது பொய் சொல்வதைத் தடுக்கும். மறதியையும் தடுக்கும். பண விஷயம் நம் மனதில் நம் அபிப்பிராயப்படி இருக்குமே தவிர உள்ளபடியிருக்காது. கற்பனைக்கு பண விஷயத்திலும் பெண் விஷயத்திலும் **ஆர்வம் நிறைந்த திறமையுண்டு.** பணம் 4,5 முறை பெட்டியில் வைத்தால் 40, 50 முறை வைத்ததாக கற்பனை கூறும். மனம் கற்பனைக்கு பண விஷயத்தில் உரிமை கொடுத்துவிட்டு நகரும். 15,000; 5000; 45,000; 100,000 பெட்டியில் வைத்தவர் அடுத்த நாளில் 300 தரம் அதை நினைத்து **மேலும் பல முறை பணம் வைத்ததாகக் கற்பனை செய்து** கற்பனையை உண்மை என்று கொண்டு 3ம் நாள் முடிவில் பெட்டியில் 2,65,000 வைத்ததாக நினைத்து எடுத்து எண்ணிப்பார்த்து 'திருடு போயிற்று' என்று முதலில் திகில் அடைவார். அடுத்தாற்போல் வேறு எங்கோ வைத்து விட்டதாக பல இடங்களிலும் தேடி எரிச்சல் படுவார். **அவர் எழுதி வைத்திருந்தால் 1,65,000க்கு பதிலாக 2,65,000ஐ எதிர்பார்த்து எழுத மறந்ததாக நினைப்பார்.** பணம் மனத்தை கற்பனைக்குக் கொடுத்து விட்டு, சந்தேகம், எரிச்சல் படச்செய்யும். இந்த நேரத்தில் Record செய்த நம்பரை ஒத்துக்கொள்ள மனம் தயங்கும். தயங்குகிறதோ இல்லையோ Record பேசும். அடுத்தவர் விஷயத்தில் குழப்பம் கோளாறாகி, நம்மையே நம்பாதது போல் அவரை நம்பாமல் சண்டை எழும். மத்தியஸ்தம் பேசினால் 'உலகமே அநியாயம்' எனத் தோன்றும். **இவ்வளவு குழப்பங்களுக்கும் காரணம் சுயநலம், பேராசை, கற்பனை செய்ததை நிஜம் எனக் கொள்ளும் மனப்பான்மை.** வயது 50தைத் தாண்டியவர் ஓரளவு பணம் சம்பாத்தித்து கை மீதியாக இருந்தால், அவர் போன்ற பலரை நன்கு அறிவாரானால், நான் சொல்லும் உண்மை அவருக்கு விளங்கும். அவரும் பிறர் விஷயத்தில் தனக்குக் கொடுக்கும் சலுகையைத் தரமாட்டார். 'நான் செய்வது சரி' 'பிறர் செய்வது தப்பு' என்பது மனநிலை. மனிதன் தன்னை சுயநலம் என ஏற்பது உலகிலில்லாதது. எலிசபெத் டார்சி கடிதத்தைப் படித்து தன் குறையை ஏற்றதை ஆண்கள் செய்வது கடினம். பெண்களால், அதுவும் காதல் வயப்பட்ட பெண்களால் செய்ய முடியாது.

அக்காரணத்தால் Pride & Prejudice பிரதானமான இலக்கியம். பண விஷயத்தில் பாதிப்பேர் வாங்கியதைக் கொடுத்ததாகக் கொள்வர். நினைவு உதவிக்கு வராது. 20 முறை சில்லரையாக 1½ லட்சம் வாங்கியவரை கொடுத்தவர் எவ்வளவு வாங்கினாய் எனக் கேட்ட பொழுது 'நான் வாங்கவில்லையே' என்றார். ஞாபகப் படுத்திய பொழுது 'அவரும் ஐந்தோ பத்தோ வாங்கியதாக ஞாபகம்' என்றார். பண விஷயத்திலும் பெண் விஷயத்திலும் ஞாபகத்தை நம்ப முடியாது. ஒரு பெண்ணை மணக்க விரும்பியவன் அவள் அதை கட்டாயமாக மறுத்ததை நாளடைவில் மறந்து அவள் சம்மதித்ததாக நினைத்து **தன் கற்பனையில் ஊர்ஜிதம் செய்து கொண்டு பிறகு** அவளிடம் 'என்னை ஏற்றுக் கொண்டபின் என் இப்பொழுது மறுக்கிறாய்' எனக் கேட்கும் பொழுது அவள் பொய் சொல்வதாக நம்புவான். தான் பொய் சொல்வதாகத் தோன்றாது. Man is Vital NOT Mental, மனிதன் உணர்வால் செயல்படுபவன். உணர்வு பிரியப்பட்டதை உண்மை எனக் கொள்ளும். **உள்ளதை உள்ளபடி உணர்வால் ஏற்க முடியாது**. பண விஷயத்தில் Record முக்கியம். பலரையும் எழுதிவைத்த ரெக்கார்ட் நம்ப வைக்கும். Recordக்கு உயிருண்டு, ஜீவனுண்டு, ஆத்மாவுண்டு. நாம் தவறினாலும், ரெக்கார்ட் தவறாது. 'நீ மறந்தாலும் உன் அருள் மறவாது' என்ற சொல் ஆன்மிகத்தில் உண்மை என்பது போல் 'நான் மறந்தாலும் நான் எழுதிய Record மறக்காது' என்பது உண்மை.

**Point No.45**

**வாழ்க்கை தன் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர் எப்பொழுதும் தான் வாங்கிக் கொள்ளும் உதவியை விட தான் செய்கின்ற உதவி அதிகமாக இருக்கும்படியான நிலையில் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.**

.

மனிதனுக்கு வாழ்வு முக்கியம். வாழ்வு பெரியது. மனிதன் சிறியவன். வாழ்வு மனிதனை உற்பத்தி செய்து வளர்த்து தன்னை விடப் பெரியவனாகி, தன்னை உயர்த்த அனுமதிக்கிறது. **பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் உரிய உறவு இது**. பெண்ணிற்கு இந்த இடத்தை உலகம் இதுவரை தரவில்லை. கடைசி வரை அவள் ஒரு ஆண் மகனுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். **அன்னை அந்நிலை பரிணாமத்தில் முக்கியமாக மாறுவதை கூறுகிறார்.** பிள்ளைபெற ஆர்வம் உள்ளவரை இது உண்மை. பிள்ளையைப் பெற ஆசைப்படுவது உயிரின் மையம் உடலில் இருப்பது. 'பெண் இரு விஷயங்களைக் கடந்தால் யோகம் செய்யலாம். 1) ஆணின் ஆதிக்கம் ஆழத்தில் ருசிப்பது. 2) பிள்ளை பெற வேண்டும்'. பெண் ஆத்மாவிலும் பரிணாமத்திலும் விடுபட்டால் அவளுக்கு யோகம் பலிக்கும். **யோகத்தில் பெண் ஆணை விட அதிகமாக நன்றாக சிருஷ்டிப்பாள் என்று அன்னை கூறுகிறார்.** ஆண்மகன் பெண்ணைச் சரணடைய வேண்டும் என்பதன் அடிப்படை இதுவே. மனிதன் ஆத்மாவானால் வாழ்வு அவனுக்குக் கட்டுப்படும். தலைவர்கள், சிறந்த மனிதர்கள் ஏதோ ஒரு வகையில் ஆத்மாவின் சாயலை அறிந்ததால், வாழ்வு அவர்கட்குக் கட்டுப்பட்டது என்று பொருள். Life Response கொள்கை நமக்கு வாழ்க்கை கட்டுப்படும் என்று கூறுகிறது. Life Knowledge, Character of life வாழ்வு ஞானம், வாழ்வின் சுபாவம் என்பவை இந்தியக் கருத்துகள். மேல் நாட்டிலில்லாதவை. நாம் அதைக் கருதாமல் மேல் நாட்டைப் பாராட்ட விரும்புகிறோம். **நம் மனம் வாழ்வின் ஆழத்தைத் தொடும் பொழுது வாழ்வு நம்மை ஏற்கும். நம் விருப்பப்படி செயல்படும். response தரும் என்பது Life Response.** விக்காம் எலிசபெத் ஆர்வத்தைக் கவர்ந்தான். டார்சி தன்னை அவளுக்குக் கொடுத்தான். அவள் அதை ஏற்கவில்லை, அறியவில்லை. பெம்பர்லிக்குப் போனவுடன் டார்சி என்ன கொடுத்தான் என்று புரிந்து கொண்டாள். உடல் தொடு உணர்வால் மட்டும் அறியும்.

பெம்பர்லி அவள் உடலைத் தொட்டுவிட்டது. தொட்டவுடன் மனம் மாறினாள். டார்சி நல்லவன் என்ற சொல் காதில் விழுகிறது. **ஆசை டார்சி மீது வரவில்லை. பெம்பர்லி மீது 'காதல்' எழுகிறது.** டார்சி வருகிறான். பிரியமாகப் பேசுகிறான். தங்கையை அறிமுகப்படுத்த விரும்புகிறான். மறுநாள் அறிமுகப்படுத்துகிறான். எலிசபெத் டார்சியை மனதில் ஏற்க மனம் விக்காமை விட்டு அகல வேண்டும். விக்காம் மிஸ் கிங்கை நாடினாலும், லிடியாவுடன் ஓடிப் போனாலும் எலிசபெத் மனத்தை விட்டு அகலவில்லை. **விக்காமுக்கு திருமணமானபின் அவள் மனம் அவனைக் கைவிட்டது.** அவனைக் கடைசியாக ஒரு முறை காண விரும்பி தகப்பனாரை மனம் மாறி அவனை வர அனுமதி கேட்கிறாள். அவன் மானங்கெட்டவன். மானங்கெட்டவனானாலும் என் மனம் வரித்தவன் அவனே என்று உள்ளிருந்து அவளுக்குக் குரல் எழுகிறது. வெட்கம் கெட்டவனை விரும்ப அவள் கூச்சப்படவில்லை. **வெட்கம் கெட்டவனையும் விரும்பும் மனம் என்னுடையது என்று அவள் பெருமைப்படுகிறாள்.** கடைசி வரை அவனுக்குப் பணம் அனுப்புகிறாள். பதவி உயர்வு வர விரும்புகிறாள். ஏற்ற வாழ்வு மனத்தைப் பற்றிக் கொள்ளும் வகை இது. **இந்தக் கட்டத்தில் மனம் மாறினால் வாழ்வு நமக்குக் கட்டுப்படும்.** அக்கருத்தின் சாரத்தைத் தலைப்பு

பெற மறுத்து கொடுக்கும் நிலை
வாழ்வை நம் கட்டுப்பாட்டில் கொண்டு
வரும் எனக் கூறுகிறது.

இக்கருத்து வாழ்வின் ஆழ்ந்த இரகசியங்களில் ஒன்று. ஒருவர் அடுத்தவரை விரும்பினால் அடுத்தவர் வேறொருவரை விரும்புவது வாழ்வின் சட்டம். **அந்த சட்டம் மாறி அடுத்தவர் தன்னை விரும்புபவரையே விரும்பினால்** 'வாழுநம் எனும் செருக்கு' என்று வள்ளுவர் கூறுகிறார். இதே உண்மையை நண்பரைப் பற்றியும் கூறுகிறார். என் மகள் எனக்குப் பிடிக்காத மனிதனைக் கணவனாக ஏற்றால் அவர் மீது எனக்குப் பிரியம் எழ வேண்டும் என்பது வாழ்வைக் கடந்த உண்மை. வாழ்வைக் கடந்த உண்மையை மனம் ஏற்றால் மனம் மலர்ந்து ஆத்ம ஜோதி எழும். வாழ்வு கட்டுப்படும். நாம் செய்யும் காரியங்கள் நீரோட்டமாக தடையின்றி பூர்த்தியாகும். திருவள்ளுவர் நட்பிலும் திருமணத்திலும் - இரு முக்கிய கட்டங்கள் - இதைக் கூறுகிறார். அன்னை அதனடிப்படையில் அடுத்த கட்ட உண்மையைக் கூறுகிறார். **தலைப்பு அதை நடைமுறையில் கூறுகிறது.**